


**தலைப்பு செய்திகள்**

1. **சர்வதேச மகளிர் தினத்தில் பாலின சமத்துவத்திற்காக** செயலாற்ற அனைவரும் உறுதியேற்க குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அழைப்பு விடுத்துள்ளார்.

2. **மகளிரின் ஆளுமைக்காக தமது தலைமையிலான மத்திய அரசு** அர்ப்பணிப்புடன் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. **காஞ்சிபுரம், ஈரோடு உள்ளிட்ட 9 இடங்களில் 72 கோடி ரூபாய்** மதிப்பீட்டில், புதிய தோழி விடுதிகள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. **நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மகளிர் முன்னேற்றத்திற்காக** எண்ணற்ற திட்டங்களை மத்திய அரசு நடைமுறை படுத்தியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் தெரிவித்துள்ளார்.

5. **ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர்** அரையிறுதியில் ஆயுஷ் ஷெட்டி இன்று களமிறங்குகிறார்.

❖❖❖❖❖❖

**சர்வதேச மகளிர் தினம்**

**உலகளவில் 3-வது பெரிய பொருளாதார நாடாக** இந்தியா உருவெடுத்து வரும் நிலையில், பெண்கள் அதிகளவில் பணிகளில் நியமனம் செய்யப்படுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பாதையில் பெண்களின் தலைமைத்துவம் என்ற தலைப்பிலான தேசிய மாநாட்டில் இன்று அவர் உரையாற்றினார்.

சமுதாயத்திற்கான மகளிரின் அர்ப்பணிப்பு மிகு சேவைகளை கவுரவிக்கும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுவதாக கூறினார்.

பாலின சமத்துவத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அனைவரும் உறுதியேற்க வேண்டிய தினம் இது என்றும் குடியரசு தலைவர் கூறினார்.

மகளிர் மிகப்பெரிய முன்னேற்றங்களை சந்தித்து வருவதாகவும், அதற்கு சிறந்த உதாரணமாக தாம் திகழ்வதாகவும் குடியரசு தலைவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டை தொடர்ந்து மகளிர் நலம் மற்றும் வளர்ச்சியடைந்த பாரதம் தொடர்பான உயர்நிலை விவாத அமர்வுகள் இடம்பெறுகின்றன.

மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு.அன்னபூர்ணா தேவி இதில் பங்கேற்றுள்ளார்.

முன்னதாக குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள வாழ்த்து செய்தியில், தடைகளை தகர்த்தெறிந்து பெண்கள் வேகமாக முன்னேறி வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

மகளிரின் உரிமை, சமத்துவம், ஆளுமையை உறுதிசெய்ய மத்திய அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளை அவர் எடுத்துரைத்தார்.

மகளிர் தம் பாதையில் வெற்றிகரமாக முன்னேற ஆதரவளிக்க நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் உறுதியேற்க வேண்டுமென்றும் அவர் கேட்டுகொண்டார்.

இதன்மூலம் பாலின சமத்துவத்தோடு பெண்கள் தங்களுடைய கனவுகளை எவ்வித அச்சமுமின்றி முன்னெடுத்துச்செல்ல முடியும் என்று குறிப்பிட்டார்.

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் சமூகத்தின் முதுகெலும்பாக திகழும் மகளிர் அர்ப்பணிப்புடனும், தலைமைத்துவத்துடனும், வலிமையுடனும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார்.

மகளிர் முன்னின்று வளர்ச்சியையும், முடிவுகளையும் மேற்கொள்ளும் போதே, சமுதாயத்தில் உண்மையான ஆளுமை ஏற்படும் என்று கூறினார்.

மகளிர் தலைமையிலான மேம்பாடே வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான அடிப்படை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனைவரையும் உள்ளடக்கிய ஆக்கப்பூர்வமான முன்னேற்றமான எதிர்காலத்தை உறுதிசெய்ய திரு.ஜக்தீப் தன்கர் அழைப்பு விடுத்தார்.

❖❖❖❖❖❖

**மகளிர் தினம் பிரதமர்**

**மகளிர் ஆளுமைக்காக தமது தலைமையிலான** மத்திய அரசு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் நவ்சாரியில் லட்சாதிபதி பெண்கள் அமைப்பு நிகழ்வில் 25 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களை சேர்ந்த, இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு 450 கோடி ரூபாய் நிதியுதவியை இன்று வழங்கி பிரதமர் உரையாற்றினார்.

மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

நாடுமுழுவதும் மகளிருக்கு ஆயிரக்கணக்கான கழிப்பறைகள் கட்டப்பட்டதன் மூலம் மகளிரின் அடிப்படை சுகாதாரமும், தனித்துவமும் உறுதி செய்யப்பட்டு அவர்கள் மதிப்புடனும், மரியாதையுடனும் வாழ வழிகோலப்பட்டிருப்பதாக கூறினார்.

மகளிரின் தேவைகளுக்கு ஏற்ப செயல்பட்டு அவர்களுக்கு ஆதரவான சமுதாய சூழலை உருவாக்க அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர், சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமது சமூக வலைதள கணக்கை அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பெண்கள் தங்களது சாதனைகளையும், தாங்கள் கடந்துவந்த பாதைகளையும் அதில் வெளியிட்டு வருவதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பெண்கள் பல்வேறு பிரிவுகளில் வெற்றிகரமாகவும், அறிவாற்றலுடனும் செயலாற்றி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களின் தீர்க்கமான முடிவுகளும், அவர்தம் வெற்றியும் மகளிரின் எல்லையில்லா திறனையும், வலிமையையும் வெளிப்படுத்துவதாக பிரதமர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை வடிவமைப்பதற்கான பெண்களின் அளப்பறிய பங்கை தேசம் கொண்டாடுவதாக தெரிவித்தார்.

நம்நாட்டில் பெரும் மாற்றங்களை உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் வகையில் வலுப்படுத்த வேண்டுமென்றும், நவீன இந்தியாவின் வடிவமைப்பாளராக திகழ பெண்கள் பிரதமரின் சமூக வலைதளப்பதிவில் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் தமது சமூக வலைதள கணக்கை ஒப்படைத்திருப்பது குறித்து பல்வேறு தரப்பு பெண்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி பெண்களை தலைவணங்குவதாகவும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி 2 நாள் பயணமாக** வரும் 11-ம் தேதி மொரீஷியஸ் செல்கிறார்.

அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பிரதமர் கலந்துகொள்கிறார்.

இப்பயணத்தின் போது மொரீஷியஸ் அதிபர், பிரதமர் உள்ளிட்டோரை பிரதமர் சந்தித்து பேசுகிறார்.

இந்திய நிதியுதவியுடன் அங்கு அமைக்கப்பட்ட கல்லூரி மற்றும் சுகாதார மையத்தை திறந்து வைக்கும் பிரதமர் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திடுகிறார்.

❖❖❖❖❖❖

**ஜே..பி. நட்டா**

நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் 75 ஆயிரம் புதிய மருத்துவ இடங்கள் கூடுதலாக உருவாக்கப்படும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் சுகாதார தொழில்நுட்ப ஆய்வு தொடர்பான சர்வதேச கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை 101 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

உயர் மருத்துவ சிகிச்சைகளை வலுப்படுத்தும் வகையில் 22 எய்ம்ஸ் மருத்துவமனைகள் தொடங்கப் பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

துணை மருத்துவம், செவிலியர், முன்கள மருத்துவ பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சுகாதார பிரிவை விரிவுப்படுத்த அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖

**மகளிர் தினம் - முதலமைச்சர்**

**தமிழ்நாட்டில் மகளிர் உரிமையை அனைத்து** தளங்களிலும் தமது தலைமையிலான அரசு உறுதிசெய்வதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சர்வதேச மகளிர் தினவிழா கொண்டாட்டங்களில் இன்று உரையாற்றிய முதலமைச்சர், காஞ்சிபுரம், ஈரோடு உள்ளிட்ட

9 இடங்களில் 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 700 படுக்கைகளுடன் புதிய தோழி விடுதிகள் அமைக்கப்படும் என்றார்.

மாநிலத்தில் நான்கரை லட்சம் மகளிருக்கு 3 ஆயிரத்து 190 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் ஆயிரம் மகளிர் சுயஉதவி குழுவினருக்கு அடையாள அட்டைகளை வழங்கிய அவர், சிறந்த தொழில்முனைவோராக உயர்ந்திட அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக சமூகநலன், சுற்றுசூழல், தொழிலாளர் நலத்துறை சார்பில் மகளிருக்கு 250 ஆட்டோக்களை அவர் வழங்கினார்.

தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடைபெறும் மகளிர் அதிரடி படையினரின் சாகச நிகழ்ச்சிகளையும் முதலமைச்சர் பார்வையிட்டார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை கையாள பெண்காவல் ஆளிநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியையும் முதலமைச்சர் துவக்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மகளிர்** முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்கள் நடைமுறை படுத்தப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு தமது சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக்களை உரித்தாக்கினார்

மும்மொழி கொள்கைக்கு ஆதரவான பி.ஜே.பி.யின் கையெழுத்து இயக்கத்திற்கு பொதுமக்கள் மத்தியில் மிகப்பெரிய ஆதரவு கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய அரசு மீனவர்களை பாதுகாக்கும் வகையில் செயல்பட்டு வருவதாகவும் அவர்களது தொழில் வளர்ச்சி பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**மகளிர் தினம் மாவட்டங்கள்**

**தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மகளிர் தின** விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**மயிலாடுதுறையில் பெண்களுக்கு எதிரான** குற்றங்கள் குறித்து புகார் அளிக்கும் இலவச சேவை எண் 181 சேவை விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**அரியலூரில் நடைபெற்ற வேகநடை போட்டியில்** ஏராளமான பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி** மருத்துவனையில் தாயும், சேயும் ஓடும் நெடுந்தூர ஓட்டப் போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெயசீலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்

ஏராளமான பெண்கள் தத்தம் புதல்வர்களுடன் இதில் கலந்துகொண்டனர்.

**வேலூரில் பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி** காவல்துறை சார்பில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி துவக்கி வைத்தார்.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மதிவாணன் உட்பட திரளான கல்லூரி மாணவிகளும், பெண் காவலர்களும் இதில் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**பெண்கள் எந்த சூழ்நிலையிலும்** விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டால் சாதனைகளை படைக்கமுடியும் என்று கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த பெண் பேருந்து ஓட்டுநர் தெரிவிக்கிறார்

❖❖❖❖❖❖

**நெல்லை**

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் 13 நாட்களுக்கு பிறகு சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**ஃபிரான்ஸில் நடைபெறும் ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ்** பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி - தைவானின் **Chun-Yi Lin** ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**துபாயில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட்** போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா நாளை நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**